1986 எப்ரல் 28

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள்.

*216. வினா.—திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடுகளில், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (அ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் எதுவும் வெளிநாடுகளில் இல்லை

(இ) கேள்வி எழுவில்லை.

(முற்பகல் 10-30)

திரு. அ. ப. சிவராமன்: இந்தியாவினுடைய பெரும் தொழில்கள் என்று பார்த்தால், முதலிடம் வகிப்பது விவசாயம். அடுத்து, கைத்தறித் தொழில் வருகிறது. அதுவும் தமிழகத்தைப் பொறுத்தமட்டில், 5.60 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. இது இந்தியாவிலே இருக்கின்ற மொத்த கைத்தறிகளில் ஆறில் ஒரு பங்கு என்று சொல்கிறார்கள். இதை மனதிலே கொண்டு புதிய நவீன ரகங்களைத் தோற்றுவித்து, வெளிநாடுகளில் மார்க்கெட்டுகளில் விற்பனை செய்வதற்கு இந்த அரசு இதுவரை என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது? அவ்வாறு வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் ஏதாவது இடையூறுகள் அல்லது இடர்ப்பாடுகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: இந்தியாவிலுள்ள மொத்த நெசவாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தமிழகத்தில் தான் இருக்கிறார்கள். அதாவது சுமார் 20-ல் இருந்து 30 லட்சம் நெசவாளர்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். இந்தியாவில் உற்பத்தியாகிற கைத்தறியில் சுமார் மூன்றில் ஒரு பங்கு தமிழகத்தில் தான் உற்பத்தியாகிறது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகக் கூடிய கைத்தறியை எடுத்துக்கொண்டால், மூன்றில் இரண்டு பங்கு தமிழகத்தில் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார்கள் அவற்றை ஏற்றுமதி செய்கிறார்கள். கோவாப்டெக்ஸ் என்கிற நிர்வாகத்திலுள்ள நிறுவனம் அதிகமாக ஏற்றுமதி செய்யாமல், ஆண்டு ஒன்றுக்கு 1 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். புதிதாக மத்திய வாணிபக் கழகத்தின் மூலமாக, கோவாப்டெக்ஸ் துணிகளை வெளிநாடுகளிலுள்ள ஏஜெண்டுகள் மூலமாக அதிகமான துணிகளை விற்கலாமா என்பது பற்றி அரசு யோசித்து வருகிறது.

1986 ஏப்ரல் 28]

திரு. ஏ. ஜே. தாஸ் : ஏற்கெனவே சிங்கப்பூரில் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டதே, அது தொடர்ந்து நடைபெறுகிறதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. வி. வி. சுவாமிநாதன் : கோவாப்டெக்ஸ் சிங்கப்பூரில் ஒரு விற்பனை நிலையத்தை ஆரம்பித்தது, அதில் நஷ்டம் வந்ததால் அது நிறுத்தப்பட்டது. இன்றைக்கு இந்தியாவிலுள்ள புகழ் பெற்ற பல ஆலைகள் தங்களுடைய துணிகளை தனியாக வெளிநாடுகளில் விற்பனை செய்கின்றன. அதுபோல கோவாப்டெக்சும் தானே அங்கே விற்பனை நிலையங்களைத் திறந்து நஷ்டம் அடைவதைக் காட்டிலும், வெளிநாடுகளில் இருக்கின்ற ஏஜெண்டுகளை இதற்காக நியமித்து, அவர்கள் மூலமாக விற்பனை செய்யலாமா என்பது பற்றி அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ப. சிவராமன் : உயர்ந்த ரக துணிகளைத்தான் வெளிநாடுகளில் விரும்புகின்றார்கள் என்பது உண்மையா? எவ்வளவு மதிப்புள்ள துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன? வரவர அந்நியச் செலாவணி அதிகமாகிக் கொண்டு வருகிறதா, இல்லை குறைகிறதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : அதுபற்றி விவரம் இல்லை.

பாலர் பள்ளிகள்.

* 217. வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன—

(அ) 1-10-1985 அன்றுள்ளபடி, சமூக நலத் துறையின் கீழ் இயங்கி வரும் பாலர் பள்ளிகள் எத்தனை?

(இ) அவற்றில் பணியாற்றும் அமைப்பாளர்கள் அல்லது ஆசிரியைகள் எத்தனை பேர்?

(உ) பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் மாத ஊதியம் எவ்வளவு?

(எ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) 9,140 பள்ளிகள்.

(இ) 9,140. குழந்தைகள் நல அமைப்பாளர்கள் பணியாற்றுகிறார்கள்.

(உ) இவர்களுக்கு கௌரவ ஊதியமாக மாதம் ரூ. 195 அளிக்கப்பட்டு வருகிறது.

(எ) இல்லை.